DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.43/2019**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | மாரிமுத்து | Caste: | |
| Father's Name: | ராசு | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 30.05.2023.

A3 present. Other accused absent. U/s. 317 Crpc petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பார்த்திபனூர் தெற்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையர் வகுப்பைச் சார்ந்தவர். ஆஜர் எதிரி வினோத்குமாரைத் தெரியும். நீதிமன்றத்திற்கு வராத எதிரிகளைத் தெரியும். எதிரிகளில் பாலகிருஷ்ணன், லதா, அஜித் ஆகியோர் இந்து மறவர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் அனைவரும் இந்து அகமுடையார் சாதியைச் சார்ந்தவர்கள் .கடந்த 17.09.2017 ம் தேதி 4.00 மணிக்கு என் மாமா மகள் சாவித்திரியும், என் சித்தி மகள் சுகுணா பாரதியும் பார்த்திபனூரில் உள்ள கடைக்கு சென்றுள்ளார்கள். பார்த்திபனூர் புதுத்தெரு வழியாக உச்சி காளியம்மன் வழியாக நடந்துசென்றபோது அந்த வழியாக வந்த எதிரி சரவணன் தகாத வார்த்தைகளால் பேசி வறியா கருவக்காட்டுக்குள் போவோம் என்று அவர்களிடம் சொல்லியுள்ளார். அத்துடன் அழுதுகொண்டு அவர்கள் வீட்டிற்கு வந்து என் பெரியப்பா

மதுரைவீரனிடம் நடந்ததை சொல்லியுள்ளார்கள். பின்னர் என் பெரியப்பாவும் அவர் மகன் முனியசாமியும் மாலை 5.00 மணிக்கு பேசியது யார் என்று விசாரிக்க அந்த இடத்திற்கு சென்றுள்ளார்கள். இதை கேள்விப்பட்டு நானும் என் அண்ணன் மகன் செந்தூரபாண்டி மற்றும் என் மைத்துனர் பாலமுருகன் புதுத்தெருக்கு சென்றோம். அங்கு உச்சி காளியம்மன் கோவில் அருகில் என் பெரியப்பா எதிரிகள் சரவணன், முத்துப்பாண்டி, அஜித், வினோத் ஆகியோருடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது சரவணன் " என்னடா பறப்பயல்களா இங்கு வந்து எங்கள என்னடா கேள்வி கேக்குறீங்க " என்று சொல்லி என் பெரியப்பாவின் இடது கன்னத்தில் அறைந்தார். எதிரி முத்துப்பாண்டி என் பெரியப்பா மகன் முனியசாமியை இடது கன்னத்தில் அறைந்தார். எதிரி அஜித் என் பெரியப்பா மகன் முனியசாமியை முள்ளு கம்பால் இடது கையில் அடித்தார். எதிரி வினோத்குமார் என் பெரியப்பாவை முள்ளு கம்பால் முதுகில் அடித்துவிட்டார். எதிரி பாலகிருஷ்ணன் முனியசாமி முதுகில் ஓட்டால் அடித்தார். பாலகிருஷ்ணனின் மனைவி லதா விலக்கமாற்றால் முனியசாமியை அடித்தார். எதிரிகள் மாரீஸ்வரியும், மகேஸ்வரியும் என் பெரியப்பாவையும் முனியசாமியையும் மாறி மாறி விலக்கமாற்றால் அடித்தார்கள். நான், செந்தூரபாண்டி, பாலமுருகன் ஆகியோர் விலக்கிவிட்டு ஆட்டோவில் மதுரைவீரனையும் அவர் மகன் முனியசாமியையும் பார்த்திபனூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இது சம்பந்தமாக பரமக்குடி காவல்துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார். நான் சொன்னதை பதிவு செய்து கொண்டார்.

**எதிரிகள் 5, 6 தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இந்த வழக்கு விஷயமாக பரமக்குடி காவல்துணைக்கண்காணிப்பாளர் என்னை சம்பவம் நடந்த மறுநாள் காலை 10–11 அளவில் என் வீட்டில் வைத்து விசாரித்தார். பொதுவாக நான் பெயிண்டிங் வேலைக்கு காலை 9.00 மணிக்கு சென்று மாலை 6.00 மணிக்கு வருவேன். என் வீட்டுக்கும் உச்சிகாளியம்மன் கோவிலுக்கும் இடையே சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும். என் பெரியப்பா மதுரைவீரனும் அவர் மகன் முனியசாமியும் சம்பவ சமயத்தில் பார்த்திபனூர் ஊராட்சியில் துப்புரவு பணி செய்து வந்தார்கள் என்றால் சரிதான். எதிரி சரவணன் என் மாமா மகள் சாவித்திரியையும், என் சித்தி மகள் சுகுணா பாரதியையும் பார்த்து வறியா காட்டுக் கருவேக்குள் போவோம் என்று கேட்டதாக நான் காவல்துணைக்கண்காணிப்பாளர் விசாரித்தபோது சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். எதிரி முத்துப்பாண்டி சாட்சி முனியசாமியின் இடது கன்னத்தில் அறைந்ததாக காவல்துணைக்கண்காணிப்பாளர் விசாரித்தபோது சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். எதிரி பாலகிருஷ்ணன் முனியசாமியின் முதுகில் அடித்தாகவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நடந்ததாக சொல்லும் சம்பவம் சுமார் ஒன்றரை மணிநேரம் நடந்தது. உச்சிகாளியம்மன் கோவிலுக்கும் பார்த்திபனூர் காவல்நிலையத்துக்கும் சுமார் 300 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். அந்த இடத்தில் இருந்தவர்கள் போலிசாரிடம் தகவல் சொல்லி போலிசார் அந்த இடத்திற்கு 15 நிமிடத்துக்குள் வந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் எங்களை விசாரித்தார்கள். என்னிடம் வாக்குமூலம் பெற்று கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கவில்லை. போலிசார் எங்களை காவல்நிலையத்துக்கு அழைத்து

சென்றார்கள். அங்கு என் பெரியப்பா மதுரைவீரன் புகார் கொடுத்தார். எப்போது அவர் புகார் கொடுத்தார் என்றால் நேரம் சரியாக தெரியவில்லை. நான் அவருடன் மருத்துவமனைக்கு செல்லவில்லை. சம்பவத்திற்கு பின் மதுரைவீரனுக்கோ முனியசாமிக்கோ சட்டையில் இரத்தக்கரை இருந்ததா என்றால் இல்லை. இருவரும் அன்று என்ன சட்டை அணிந்திருந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்பதும் சாட்சி முனியசாமி என் உறவினர் என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

மற்ற எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)